


**02. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - ஜப்பான் இடையே பொருளாதாரம், எரிசக்தி பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு பிரிவுகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. தமிழக பட்ஜெட்டிற்கு முந்தைய துறை வாரியான ஆலோசனை கூட்டம் முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் சென்னையில் இன்று தொடங்கியது.

3. சட்ட கல்லூரிகளின் காலிப்பணியிடங்கள் நிரப்பபடும் என்று மாநில சட்ட அமைச்சர் திரு.நிர்மல் குமார் கூறியுள்ளார்.

4. கன்னியாகுமரி அணுகனிம சுரங்க திட்டத்தை செயல்படுத்த முனைவது குறித்து தமிழக அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

5. தனியார் பள்ளி கல்லூரிகளில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்து ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

**************

பிரதமர்

இந்தியா - ஜப்பான் இடையே பொருளாதாரம், எரிசக்தி பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு பிரிவுகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஜப்பான் பிரதமர் ட்க்காய்ச்சியுடன் மேற்கொண்ட வருடாந்திர உயர்நிலை பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், இருநாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவின் நம்பக தன்மையை எடுத்துரைத்தார்.

உலகளாவிய பெரிய பொருளாதார நாடுகளாக இரு நாடுகளும் திகழ்வதோடு தடையற்ற வெளிப்படையான இந்தோ பசிபிக் பிராந்தியமே இரு நாடுகளின் முன்னுரிமை என்று எடுத்துரைத்தார்.

இருநாடுகளுக்கிடையிலான நட்புறவின் தொழில்நுட்ப பங்களிப்பு முக்கிய அங்கம் வகிப்பதாக கூறினார்.

பாதுகாப்பு தொழில்நுட்பத்தின் முதல் ஒத்துழைப்பு மேம்பாட்டு திட்டத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளதாக பிரதமர் கூறினார்.

முன்னதாக ஜப்பான் பிரதமருக்கு குடியரசு தலைவர் மாளிகையில் பாரம்பரிய முறைப்படி சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் திரு.நரேந்திரமோடி இந்நிகழ்வில் பங்கேற்றார்.

ஜப்பான் பிரதமரின் இந்திய வரவு இருநாடுகள் இடையிலான உலகளாவிய நட்புறவு மற்றும் சிறப்பு தூதரக உறவுகளை முன்னெடுத்து செல்லும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**************

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.விஜய் தலைமையில் தமிழக பட்ஜெட்டிற்கு முந்தைய துறை வாரியான ஆலோசனை கூட்டம் சென்னையில் இன்று தொடங்கியது.

முதற்கட்டமாக கூட்டுறவு மற்றும் உணவு துறை சார்ந்த ஆலோசனை கூட்டம் இடம்பெறுகிறது.

துறை சார்ந்த அமைச்சர்கள் செயலாளர்கள் அதிகாரிகள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

வரும் 22ஆம் தேதி வரை இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

**************

நிர்மல் குமார்

தமிழக சட்ட கல்லூரிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக மாநில சட்ட அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்ட பல்கலைகழகத்தின் பெருங்குடி வளாகத்தில் 24 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட உள்ள புதிய மாணாக்கர் விடுதி கட்டிடத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், சட்டக்கல்லூரிகளில் காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

வாய்ஸ்

**************

வினோத்

விவசாயிகளின் கோரிக்கை முதலமைச்சரின் நேரடி கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று மாநில வேளாண் துறை அமைச்சர் திரு. வினோத் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நடப்பாண்டிற்கான வேளாண் தனி நிதிநிலை அறிக்கைக்கான விவசாயிகள் கருத்துக் கேட்புக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், நிதி நெருக்கடி நிலையிலும் தரமான பயிர் உற்பத்திக்கு தேவையான விதைகள், நடவு பொருட்கள், உரங்கள் உள்ளிட்டவைகள் உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு கிடைத்திட அரசு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சேலம் தர்மபுரி, கிருஷ்ணகிரி கோவை, ஈரோடு உள்ளிட்ட 10 மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.

**************

ரஞ்சித் குமார்

காஞ்சிபுரம் மாவட்டம் களக்காட்டூர் ஊராட்சி குருவிமலை கிராமத்தில் வளர்ச்சி அடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ் 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மேம்பாட்டு திட்ட பணிகளை மாநில வனத்துறை அமைச்சர் திரு.ரஞ்சித் குமார் இன்று துவக்கிவைத்தார்.

இத்திட்டத்தினை பயனாளிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

**************

அஇஅதிமுக

மக்கள் பிரச்சனைகளுக்காக குரல் கொடுத்து மக்களுக்காக நிற்பது மட்டுமே அஇஅதிமுகவின் ஒரே பணி என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இப்பணி என்றும் தொடரும் என்றும் தமது சமூகவலைதள பதிவில் அவர் கூறியுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் அணுகனிம சுரங்க திட்டத்தை த.வெ.க-வின் செயற்குழு கூட்டம் கடந்த 2024-ம் ஆண்டு நச்சு திட்டம் என்று கூறி கைவிட வலியுறுத்திய நிலையில், தற்போது இந்த திட்டத்திற்கான ஒதுக்கீட்டு ஆணையை ஓராண்டிற்கு நீட்டித்து அரசாணை வெளியிட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்.

நச்சு திட்டம் என்று த.வெ.க அன்று சொன்ன திட்டத்தை தற்போது செயல்படுத்த முனைவது குறித்த காரணத்தை முதலமைச்சர் விளக்க வேண்டும் என்றும் கோரினார்.

உள்ளபடியே இது நச்சு திட்டம் என்றால் அதனை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் திரு.எடப்பாடி. கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

**************

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக அஇஅதிமுக அல்லாத மாற்று ஆட்சியையே மக்கள் தேர்வு செய்ததாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு.சண்முகம் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் அடிப்படையிலேயே தற்போது ஆட்சி அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மக்கள் தீர்ப்பை மதித்து இடது சாரி கட்சிகள் அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு அளித்து வருவதாகவும், தேர்தல் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாத திமுக ஆட்சியை கவிழ்க்கும் முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் குறை கூறினார்.

விருப்பத்தின் பேரில் ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு ஒருவர் செல்வது வேறு என்றும், பணம் கொடுத்து மாற வைப்பது வேறு என்றும் அவர் குறிப்பிட்டார்.

பண பேரத்தின் மூலம் கட்சி மாறவைக்கும் செயல்களில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தமிழகத்திற்கான டெல்லி பிரதிநிதியை நியமிப்பது முதலமைச்சரின் தனிப்பட்ட அதிகாரம் என்று கூறிய அவர், இடதுசாரி கட்சிகள் எந்த அரசியல் அணியிலும் இல்லாமல் தனித்தே செயல்படுவதாக எடுத்துரைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அணு கனிம சுரங்க திட்டத்திற்கான அனுமதி ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், தனியார் பள்ளி கல்லூரிகளில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்து ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**************

பா.ம.க

மேகதாது அணை பிரச்சனை குறித்து தமிழக அரசு உடனடியாக அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி விவாதிக்க வேண்டும் என்று பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தினார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து கட்சி பிரதிநிதிகளையும் அழைத்து பிரதமரையும், மத்திய நீர்வளத்துறை அமைச்சரையும் சந்தித்து இந்த அணை கட்டப்படுவதால் தமிழகத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

தமிழகத்தில் காவிரி நதியை நம்பியுள்ள ஐந்தரை கோடி மக்கள் மேகதாது அணையால் பாதிக்கப்படுவார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அணை கட்டப்படுவதால் 12 ஆயிரத்து 500 மலைக்காடுகள் அழிக்கப்படுவதுடன் சுற்றுச்சூழலுக்கு பேரழிவு உருவாகும் என்றும் எடுத்துரைத்தார்.

காவிரி நதி நீர் தொடர்பான எந்த பிரச்சனையும் 2033 ஆம் ஆண்டுவரை வரக்கூடாது என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்திய நிலையில் அரசியல் ஆதாரத்திற்காக கர்நாடக முதலமைச்சர் திரு.சிவகுமார் மேகதாது அணை பிரச்சனையை தொடர்ந்து எழுப்பி வருவதாக குற்றம் சாட்டினார்.

மேகதாது அணை பிரச்சனையை சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அணுக உரிய தீர்வு காணப்பட வேண்டும் என்று அவர்வலியுறுத்தினார்.

கர்நாடக அரசு நீர் பாசனத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை தமிழகத்தை ஆண்ட முந்தைய அரசுகள் கொடுக்காத காரணத்தால் காவிரியில் கிடைக்கும் நீர் வீணாக கடலில் கடக்கும் நிலை தொடர்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

**************

கவுன்சிலர்கள் ஆர்பாட்டம்

தென்காசி நகராட்சியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த கோரி திமுக அஇஅதிமுக மதிமுக காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து கட்சி கவுன்சிலர்கள் தமிழக அரசை கண்டித்து இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

த.வெ.க அரசு பதவி ஏற்ற பின்னர் வார்டு பகுதிகளில் அடிப்படை பணிகள் எதுவும் நடைபெற வில்லை என்று கூறி அனைத்து கவுன்சிலர்களும் அரசுக்கு எதிராக

கண்டன கோஷங்களை எழுப்பியவாறு நகராட்சி அலுவலகம் முன்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீர்வளத்தை பாதுகாக்கும் நோக்கில் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணிகள் இன்று தொடங்கப்பட்டுள்ளன.

**************

இருவரி

சேலம் அஸ்தம்பட்டி அம்பா பேட்டை மண்டலங்களில் செயல்படும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஆணையர் திரு.லலித் ஆதித்ய நீலம் இன்று ஆய்வு செய்தார்.

இயந்திரங்களின் பராமரிப்பு சுத்திகரிப்பு விவரங்கள் உள்ளிட்டவற்றை கேட்டறிந்த அவர், பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

அரியலூர் மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் நிலுவை பணிகளை துரிதமாக முடிக்க ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி அறிவுறுத்தியுள்ளார்.

மதுரை வேளாண் அறிவியல் நிலையத்தில் ஆடி பருவத்தில் பயிரப்படுவதற்கான உளுந்து பயிர்கள் கையிருப்பில் உள்ளதாக மாவட்ட வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

**************

நாகை

நாகை மாவட்டத்தில் காரீஃப் பருவத்திற்கான மின்னணு பயிர் கணக்கெடுப்பு பணிகளில் தன்னார்வலர்கள் பங்கேற்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் குமார் அழைப்பு விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

போதை விழிப்புணர்வு

விழுப்புரத்தில் போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் நடைபெற்ற இப்பேரணியில் ஏராளமான மகளிர் சுய உதவிக்குழு பெண்கள் விழிப்புணர்வு பதாகைகளுடன் பங்கேற்றனர்.

**************

கோவில்

திருவண்ணாமலை ஆதி அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் இதில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

டென்னிஸ்

விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி – நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை – நெதர்லாந்து, அமெரிக்கா இணையை இன்று எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, பிரேசிலின் மாசிலோ இணை – பெல்ஜியம் நெதர்லாந்து இணையுடன் மோதுகிறது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது